**Starting time 11.24 A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 78/2020**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 15.04.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** தாவா சொத்தான புல எண் 18/4 ஆனது அரசு புறம்போக்கு தரிசு என்று வகைப்படுத்தப்பட்ட நிலம் என்றால், தீர்வு ஏற்படாத தரிசு நிலமாகும். அந்த நிலத்தை எனது தகப்பனார் 05.10.1988 தேதியில் கிரயம் பெற்றதாக நான் கூறுவதே தவறு என்றாலும், அரசு நிலத்தை யாரும் கிரயம் பெற இயலாது என்றாலும், சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியை என்னுடைய சகோதரர் ராமசந்திரன் ஒரு லட்சுமி என்பவரிடமிருந்து பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்றதாக நான் கூறுவது தவறு என்றாலும், அவ்வாறு பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் பெறவே இயலாது என்றாலும், சரியல்ல.

2. மாதேஸ்வரன் என்ற ஒரு நபர் பொது மக்களை தூண்டிவிட்டு தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு போட வைத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த மாதேஸ்வரனை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், ஆமாம். அரசு தரப்பிலிருந்து அறிவிப்பு கொடுத்ததால் அவர்களுக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்துள்ளேன். மாதேஸ்வரன் 4-ஆம் பிரதிவாதியை தூண்டிவிட்டு நில ஆக்கிரமிப்பு

சட்டம் பிரிவு 7-ன் படி எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பினை செல்லாது என விளம்புகை செய்யக்கோரி நான் இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால், கேட்டுள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 11.31 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**